

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.6.2025) முகாம் அலுவலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியின்றி வெற்றி பெற்ற மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன், மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், எஸ். ஆர். சிவலிங்கம், திருமதி ரொக்கையா மாலிக் (எ) கவிஞர் சல்மா ஆகியோருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி – 'நான் முதல்வன்' திட்டத்தில் பயின்று

# இந்திய குடிமைப்பணி முதனிலைத் தேர்வில் தமிழ்நாட்டு மாணவர்கள் சாதனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூன் 14-**

**அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி மற்றும் "நான் முதல்வன்" திட்டத்தில் பயின்று இந்திய குடிமைப் பணி முதனிலைத் தேர்வில் தமிழ்நாடு மாணவர்கள் சாதனை படைத்துள்ளது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

தமிழ்நாடு அரசின் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியிலும் "நான் முதல்வன்" திட்டத்திலும் பயின்ற நம் மாணவர்கள் UPSC முதனிலைத் தேர்வு முடிவுகளில் இதுவரை இல்லாத எண்ணிக்கையில் சாதனை படைத்துள்ளனர்!

முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்விலும் அடுத்து நீங்கள் முத்திரை பதிக்க வாழ்த்துகிறேன். உங்கள் வெற்றிமுகங்களை நேரில் காண ஆவலாய் இருக்கிறேன்.

இந்தச் சாதனைக்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகளுக்கும் பயிற்றுநர்களுக்கும் என் பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்! தமிழ்க்கொடி உயர உயரப் பறக்கட்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (12.6.2025) தலைமைச் செயலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியின்றி வெற்றி பெற்ற மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பி. வில்சன், எஸ். ஆர். சிவலிங்கம், ரொக்கையா மாலிக் (எ) கவிஞர் சல்மா ஆகியோர் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டப்பேரவை கூடுதல் செயலாளருமான பி. சுப்பிரமணியத்திடம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழ்களை பெற்று கொண்டனர். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

'தஞ்சாவூர் - கும்பகோணம் - விழுப்புரம் வழியில் இரட்டைத்தடம் அமைக்கும் திட்டம்!

# ஒன்றிய இரயில்வே அமைச்சரவை ஒப்புதல்!

## எம்.எம்.அப்துல்லா எம்.பி. கோரிக்கைக்கு பதில்!

*புதுக்கோட்டை, ஜூன் 14-*

*தஞ்சாவூர், கும்ப கோணம், விழுப்புரம் ஆகியவற்றை இணைக்கும் 193 கி.மீ. நீளமான இரயில்வே பாதையில் இரட்டைத்தடம் அமைக்கும் பணியை உடனடியாக செயல்படுத்த வேண்டும் எனக்கோரி நாடாளுமன்ற உறுப்பினரான எம்.எம்.அப்துல்லா நாடாளுமன்றத்தில் பல்வேறு முறை பேசி வந்தார்.*

*மேலும் இது குறித்து தொடர்ச்சியாக இந்திய ஒன்றிய இரயல்வே அமைச்சர் அவர்களுக்கு கடிதங்கள் எழுதியும் வந்தார். இதன் தொடர்ச்சியாக கடந்த 27.11.2024 அன்று இரயில்வே வாரியத் தலைவர் சதீஷ்குமார் அவர்களையும் நேரில் சந்தித்து கடிதம் மூலம் கோரிக்கை வைத்தார்.*

*இது குறித்து தற்போது*



*பதிலளித்துள்ள ஒன்றிய இரயில்வே அமைச்சகம்*

*"விழுப்புரம் - கும்பகோணம் - தஞ்சாவூர் (193 கி.மீ.) பாதையில் இரட்டைத்தடம் அமைக்கும் பணிக்கான கள ஆய்வு நிறைவடைந்துள்ளது" எனவும், "ஆய்வு அறிக்கையைத் தயார் செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது," எனவும் தெரிவித்துள்ளது.*

*இந்த இரட்டை இரயில்வே தடத்திற்கான திட்டம் 1877 ஆம் ஆண்டிலேயே உருவாக்கப்பட்டது. தற்போது வரை ஒற்றைத்தடம் மட்டுமே உள்ளதால், வழித்தட நெரிசல், இரயில்கள் தாமதம், புதிய நீண்டதூர இரயில்களுக்கு இடமில்லாமை போன்ற பல பிரச்சினைகள் நிலவுகின்றன. 2019இல் ஆய்வு ஒப்புதல் கிடைத்தும், 5 ஆண்டுகளாக முன்னேற்றம் ஏதும் இல்லை. இந்நிலையில் தற்போது வந்துள்ள இந்த அறிவிப்பின் மூலம் இந்த வழித்தடத்தில் இரண்டு ரயில்கள் ஒரே நேரத்தில் எதிர் திசைகளில் இயக்கப்பட வசதியாகும். இதனால் பயணிகள் நலன் உயர்ந்து, பொருளாதார வளர்ச்சிக்கும் வாய்ப்பு அதிகரிக்கும்.*

*நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. மேற்கொண்ட தொடர் முயற்சிகளின் விளைவாக, இந்தத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தும் கட்டத்துக்கு வந்துள்ளது.*




தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் தெற்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். உடன் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சஃபி சுலைமான், மாவட்ட துணைச் செயலாளர் ஜெயக்குமார் ரூபன், ஆறுமுக பெருமாள், ஜெபதங்கம் பிரேமா, தலைமை செயற்குழு உறுப்பினர் அ.பிரம்மசக்தி, ஒட்டப்பிடாரம் இளைஞரணி துணை அமைப்பாளர் தங்கத்துரை பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்கொடி, ஏ.பி.ரமேஷ், டி.பி.பாலசிங், நவீன் குமார், இலங்கோ மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருச்சியில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் நேற்று முன்தினம் (12.6.2025) கிராப்பட்டியில் நடைபெற்ற விழாவில் மாநகராட்சி பகுதி பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மா. பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையர் சரவணன், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. தீபி சனு, மாவட்ட வருவாய் அலுவலர் ராஜலட்சுமி, வருவாய் கோட்டாட்சியர் அருள், வட்டாட்சியர் பிரகாஷ், நகராட்சி பொறியாளர் சிவபாதம், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, டோல்கேட் சுப்பிரமணி, சேர்மன் துரைராஜ், பகுதிச் செயலாளர்கள் மோகன்தாஸ், கமல் முஸ்தபா, நாகராஜ், இளங்கோ, வட்டச் செயலாளர் கிராபட்டி செல்வம், கவுன்சிலர்கள் கவிதா செல்வம், கலைச்செல்வி, மண்டி சேகர் மற்றும் மண்டல தலைவர் துர்கா தேவி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கிருஷ்ணகிரி கிழக்கு | சுபம் ஹால், ஸ்ரீ வெங்கடேஸ்வரா காம்ப்ளக்ஸ், பெங்களூரு பிரதான சாலை, கிருஷ்ணகிரி. |
| 16.06.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | கிருஷ்ணகிரி மேற்கு | ஆனந்த் கிராண்ட் பேலஸ், சிஷ்யா பள்ளி அருகில், தளி சாலை, ஓசூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12-06-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க

# தஞ்சை மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத் தலைவருக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தி.பழநிவேல் அறிக்கை!

*தஞ்சாவூர், ஜூன் 14 -*

*தஞ்சை மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துக்கொள்ள தஞ்சை மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத்தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தஞ்சை தமிழ்பல்கலைக்கழகம் அருகில் 15.6.2025 அன்று மதியம் 12 மணியளவில் பிரமாண்ட வரவேற்பு, அளிக்க கழக தோழர்கள் திராளாக பங்கேற்க வேண்டுமாய் தஞ்சை மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி,(வடக்கு), துரை.சந்திர சேகரன்எம்.எல்.ஏ, (மத்தியம்) தி.பழநிவேல் (தெற்கு) ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.*







*மாவட்டச் செயலாளர்களின் அறிக்கை வருமாறு : திராவிட ஆட்சியின் நாயகர், கழகத்தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்கள் வருகின்ற ஜூன் 15.6.2025 அன்று தஞ்சை மாவட்டத்திற்கு வருகை தந்து மாலை 5.00 மணிக்கு தஞ்சை கலைஞர் அறிவாலயம் அருகில் உள்ள ஜெயராம் மஹாலில் தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட நிர்வாகிகளை சந்தித்து கலந்துரையாடுகிறார்.*

*அதனை தொடர்ந்து பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணாசிலைக்கு எதிரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள "அகிலம் போற்றும் முத்தமிழறிஞர் கலைஞர்" அவர்களின் திருவுருவ சிலையை திறந்து வைக்கிறார். 16.6.2025 அன்று காலை 9.00 மணியளவில் தஞ்சை மஹாராஜா மஹாலில் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ இல்ல மண விழா, அதனை தொடர்ந்து காலை 10.30 மணியளவில் மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி வளாகத்தில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற உள்ளது.*

*அது சமயம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் நம்மை வழி நடத்திச் செல்லும் நமது கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்க 15.6.2025 ஞாயிறு மதியம் 12.00 மணிக்கு தஞ்சை தமிழ்பல்கலைக்கழகம் வாயில் அருகில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.*

*அது சமயம் தஞ்சை வடக்கு, மத்தியம், தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் தவறாது உரிய நேரத்தில் கலந்துக்கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.*

*குறிப்பு : கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்திற்கு வருகை தரும் நிர்வாகிகள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி கடித்தைமறக்கால் எடுத்துவரவும்.*

*இவ்வாறு தஞ்சை மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, (வடக்கு), துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, (மத்தியம்) தி.பழநிவேல் (தெற்கு) ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.*